RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2524

# ஆறுமுகக் கடவுளின் ஆற்றலும் அருளும்

க. சிங்காரவேலு [அ, *]

[அ] தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்-632115, இந்தியா

# The Power and Grace of the Six Face God

K. Singaravelu [a, *]

[a] Department of Tamil, Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115, Tamil Nadu, India

* Corresponding Author: tamilsingam80@gmail.com

Received: 10-12-2024
Revised: 16-03-2025
Accepted: 22-03-2025
Published: 05-04-2025

Check for updates

**ABSTRACT**

The only language in the world that has a God is Tamil. Lord Murugan was the one who developed the Tamil language by being a king and poet in the Tamil Sangams. Murugan means beauty. The worship of Lord Murugan has existed since ancient times. Lord Murugan is full of beauty and wisdom and bestows grace upon his servants and devotees at will. Such a god, Murugan, is considered an incarnation of Lord Shivan. Murugan appeared as the sixth face, Adho Mukham, along with the five faces of Shiva. This study examines the reasons for the emergence of such six faces, the literary references to six main sources, the relationship among the six houses and the six faces mentioned by the poets Nakkheerar, Kumaraguruparar and Arunagirinathar in their poems.

**Keywords:** Lord Murugan, Arupadai veedu, Adhomukham, Lord Shivan

## முன்னுரை

உலக மொழிகளில் பக்தியின் மொழி என்று சிறப்பிக்கப்படுவது தமிழ்மொழியாகும். பக்தியோடு தமிழ்மொழியானது அறிவியல் வளர்ச்சியும் பெற்று திகழ்கிறது. முத்தமிழ் கடவுள் என சிறப்பிக்கப்படும் முருகன் சிவனின் வடிவமாகவே கருதப்படுகிறார். சிவனின் முகமே அசுரர்களை அழிக்க ஆறாவது முகமாக அதோ முகமாக முருகன் தோன்றியுள்ளார். ஆறுமுகப்பெருமானுடைய தோற்றம், ஆறுமுகப்பெருமானின் அருள் ஆகியவை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## ஆறு என்பதன் பொருள்

ஆறு என்பது பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் அமைகிறது. ஆறு என்பதன் பொருளாக தணிதல், குறைதல், குணமாதல், எண்ணிக்கை, நீர்நிலை போன்றவற்றைக் குறிப்பிடலாம். ஆறு எனும் வகைமைகளில் ஆறு சமயங்களாக - சைவம், வைணவம், கௌமாரம், காணபத்தியம், சௌரம், சாக்தம் என்பதில் கௌமாரம் என்பது முருகக்கடவுளைப் பற்றியதாகும். மேலும் மனித உடலில் ஆறு ஆதாரங்களாக மூலாதாரம், சுவாதீஷ்டாணம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகியவை செயல்படுவதாக சித்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

சுவைகளானது இனிப்பு, கசப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என ஆறு வகையாகவும், உயிரினங்களை கேட்டல், பார்த்தல், தொடுதல், நுகர்தல், சுவைத்தல், பகுத்தறிதல் ஆகிய ஆறு வகை உணர்வுகளின் அடிப்படையில் ஆறறிவு உயிரினங்களாகப் பாகுபாடு செய்துள்ளதிலிருந்து ஆறின் சிறப்பை அறிய முடிகிறது.

உலகமானது ஐம்பூதப்பொருட்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஐம்பூதப்பொருட்களை பகுத்துக்கொண்டே போனால் பகுக்க முடியாது. பகுக்க முடியாத நிலையையே அணு என்று தற்கால அறிவியலாளர் அழைக்கின்றனர். அணு என்பது புரோட்டான், எலக்ட்ரான், கரி (கார்பன்) என்ற பொருள்களின் கூட்டாகும். ஐம்பூதப்பொருட்களில் கரி ஒன்றாகவும், புரோட்டான் ஒன்றாகவும் இருக்கின்றது. எலக்ட்ரானானது ஆறு என்ற எண்ணிக்கையுடையதாகும். எலக்ட்ரான் கரியையே சுற்றி வரும் இயல்பைக் கொண்டிருக்கும். எலக்ட்ரானில் ஆறிற்கு மேல் ஒன்று கூடினாலும் குறைந்தாலும் தனது உயிர்ப்புத் தத்துவத்தை இழந்துவிடும். எனவே உயிர்ப்புத் தத்துவமும் உயிரினங்களுக்கான ஓம்காரத் தத்துவமாகவும் ஆறுமுகனாகிய முருகன் விளங்குகிறார். ஆறு ஆதாரத் தத்துவங்களை வைத்து முருகனின் ஆறு ஆதார தலங்கள் விளங்குகின்றது. இந்த தலங்களில் மூலாதாரம் - திருப்பரங்குன்றம், சுவாதீட்டானம் - திருச்செந்தூர், மணிபூரகம் - பழனி, அனாகதம் - சுவாமிமலை, விசுத்தி - திருத்தணி, ஆக்ஞை - பழமுதிர்சோலை என ஆறு ஆதாரங்களுடன் இணைந்து உயிர்ப்பு ஆறு ஆதார தலங்களாகச் செயல்படுவதன் மூலம் ஆறின் உயிர்ப்பொருள் தத்துவத்தை அறிய முடிகிறது.

## ஆறுமுகனின் பிறப்பு

ஆறுமுகன் எனும் முருகனின் பிறப்பானது சங்க இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரைக் காணப்படுகிறது. வடமொழி நூல்களான வால்மீகி இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் முருகனின் பிறப்பு பற்றி பேசப்படுகிறது. சங்க இலக்கியங்களில் முருகன் நிலையோன், குமரன், சேயோன், மஞ்சையன், சேவலின் கொடியோன், அறுவர் பயந்த செல்வன், கொற்றவைச் சிறுவன், குறிஞ்சிக் கிழவன், மீமிசைக் கடவுள், வெறிகமழ் நெடுவேள் என பல்வேறு பெயர்களில் முருகனைக் குறிப்பிடுகின்றனர். மேலும் முருகன் ஆறுமுகமானவன் என்பதற்கு குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் காணப்படுகிறது.

“அறுமுக ஒருவநின் அடியினை தொழுதேம்” (சிலம்பு.குன்றக்குரவை.பா.17)

“அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்” (சிலம்பு.இந்திர.170)

“அறுமுகம் இல்லை அணிமயில் இல்லை

குறமகள் இல்லை செறிதோ ளில்லை” (சிலம்பு.குன்ற.பாட்டுமடை.5-8)

“அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்

இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே” (சிலம்பு.குன்றக்குரவை.8)

“அம்பவழ் மேனி அறுமுகன் போய்அவர்

தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே” (திருமந்திரம்.பா.520)

“ஐம்புலக் கிழவன் அறுமுக னிவனென

எழில்தரு மழகுடன் கழுமலத் துதித்தனை” (திருப்புகழ்.பா.1326)

“சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறுமு திகழ்கடப்பத்

தார்கொண்ட பன்னிருதோள்களும் தாமரைத் தாள்களுமோர்” (தெய்வமணிமாலை.பா.1)

என்று பல்வேறு இலக்கியங்களில் முருகனின் திருமுகங்கள் ஆறுமுகங்கள் எனக்குறிப்பிடுவதை அறிய முடிகிறது. முருகு என்ற சொல்லிற்கு அழகு என்று பொருள்படும். மெல்லின, இடையின, வல்லின மெய்யெழுத்துக்களுடன் உ எனும் உயிரெழுத்து மூன்றும் சேர்ந்து இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகியவை தோன்ற தோன்றியவர் ஆறுமுகனாவர். அசுரர்களான சூரபத்மன், தாரகாசுரன், சிங்கமுகன் ஆகியோர் சிவனை வேண்டிப் பல்வேறு

வரங்களைப் பெற்று உலகில் கொடுங்கோன்மையான ஆட்சி புரிந்து தேவர்களுக்கு தொல்லையும் தந்து வந்தனர். தேவர்கள் சிவனிடம் முறையிட சிவன் தன்னால் அழிக்க முடியாது தன்னால் உருவாக்கப்படும் ஒருவனாலே அழிக்கப்பட முடியும் என தன்னுடைய முகங்களான தத்புருசம், சத்யோ ஜாதம், அகோரம், வாம தேவம், ஈசானம் ஆகிய ஐம்முகங்களோடு ஊழியின் போது மட்டும் வெளிப்படும் அதோமுகத்தை வெளிப்படுத்தி மூன்றாவது கண்ணைத் திறந்து அவற்றிலிருந்து நெருப்புப் பொறிகள் தோன்றவே உமையவளும் அதைக் கண்டு அஞ்சி ஓடினாள். இச்செய்தியானது,

“அதோமுகம் கீழ்அண்ட மான புராணன்

அதோமுகம் தன்னோடும் எங்கும் முயலும்

சதோமுகத்து ஒண்மலர்க் கண்ணிப் பிரானும்

அதோமுகன் ஊழித் தலைவனும் ஆமே.” (திருமந்திரம். 524)

என்ற பாடல் குறிப்பிடுவதை அறியலாம்.

சிவபெருமானிடமிருந்து தோன்றிய தீப்பொறிகள் காமதேவனை தகனம் செய்தது. காற்றின் கடவுளான வாயு பகவான் தீப்பொறிகளை அக்கினிக் கடவுளிடம் எடுத்துச் சென்றார். அக்கினிக் கடவுளும் அவ்வெப்பத்தைத் தாங்க முடியாத காரணத்தினால் அத்தீப்பொறிகளை எடுத்துச் சென்று கங்கை நதியில் விடவே கங்கை நதியின் நீரானது ஆவியானது. கங்கையானது சரவணபொய்கைக்கு அழைத்துச் சென்றது. அங்கு தீப்பொறிகளானது ஆறு ஆண் குழந்தைகளாக ஆறு தாமரையில் உருவானது. அம்பா, தாளா, நிதாக்கினி, அப்ரயந்தி, மேகயந்தி,வர்ஷயந்தி என்ற ஆறு கார்த்திகைப் பெண்களும் முருகப் பெருமானை எடுத்து வளர்த்ததை,

“சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மா ரறுவர்

திருமுலைப்பா லுண்டான் திருக்கைவே லன்றே

வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து

குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே” (சிலம்பு.குன்றக்குரவை.பாட்டுமடை.9)

என்ற பாடலடி குறிப்பிடுவதை அறியலாம். முருகப் பெருமானை எடுத்து வளர்த்ததால் சிவனிடம் கார்த்திகைப் பெண்கள் அட்டமாசித்தி வரத்தைக் கேட்டனர். ஆனால் சிவனோ அட்டமாசித்தி சக்தியை தர இயலாது என்று கூறி ஆறு நட்சத்திரங்களையும் கலவையாக கார்த்திகை (கிருத்திகை) நட்சத்திரமாக திகழ்வதற்கு வரம் அளித்தார். அதன்பின்னர் முருகன் சிக்கல் எனும் திருத்தலத்தில் வேல் வாங்கி திருச்செந்தூரில் அசுரராகிய சூரபத்மன், தாரகாசுரன், சிங்கமுகன் ஆகியோரை அழித்ததை,

“பாய் இரும் பனிக்கடல் பார்துகள் படப்புக்கு

சேய் உயர் பிணிமுகம் ஊர்ந்து அமர் உழக்கி

தீ அழல் துவைப்பத் திரிய விட்டெறிந்து

நோயுடை நுடங்கு சூர்மா முதல் தடிந்து

வென்றியின் மக்களுள் ஒருமையொடு பெயரிய

கொன்று உணல் அஞ்சாக் கொடுவினைக் கொல்தகை

மாய அவுணர் மருங்கு அறத் தடித்த வேலே” (பரி.5.1-7)

என்ற பாடல் குறிப்பிடுவதை அறியலாம். அடியார்களுக்கும் தேவர்களும் அஞ்சும்பொழுது அவர்களுக்கு ஐந்து முகத்தோடு அவர்களைக் காப்பாற்றும் ஆறுமுகமாகவும் தோன்றுவார் என்பதை,

“அஞ்சும் முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்

வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும் நெஞ்சில்

ஒரு கால் நினைக்கின் இரு காலும் தோன்றும்

முருகா என்று ஓதுவார் முன்பு" (திருமுருகு..1-4)

என்ற பாடலின் மூலம் ஆறுமுருகனின் அருள் வெளிப்படுகிறது. ஆறுமுகனின் அருட்பெருமையை நக்கீரர் ஒவ்வொரு முகமாக அருள் கொடுக்கும் தன்மையை வெளிப்படுத்துவதை அறியலாம். ஒரு திருமுகமானது இருள் சூழ்ந்த உலகத்தை இருளிலிருந்து விலக்க பல கிரணங்களைத் தோற்றுவிப்பதாகும். இரண்டாம் திருமுகம் அடியார்கள் வழிபட அவர்களுக்கு வரம் கொடுத்ததும், மூன்றாம் திருமுகம் வேதநெறி போற்றும் அந்தணர்களுக்கு தீங்கு ஏற்படாதபடி அருள்புரிந்ததாகும். நான்காம் திருமுகம் வேதங்களின் நுண்பொருளை தெய்வ இருடிகளுக்கு இன்பமுற விளக்கியதாகும். ஐந்தாம் திருமுகம் பகைவர்களை அழித்து அழகான நெஞ்சோடு போர்க்களத்தை விரும்பி அருள்பொழியும் முகமாகும். ஆறாவது முகம் குறவர் மகளான வள்ளியை விரும்பி மணம் முடித்ததைக் குறிப்பிடுவதை,

"மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்

பல்கதிர் விரித்தன்று ஒருமுகம்

ஆர்வலர் ஏத்த அமர்ந்தினி தொழுகிக்

காதலின் உவந்து வரங் கொடுத் தன்றே

மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்வியோர்க் கும்மே

எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்

திங்கள் போலத் திசைவிளக் கும்மே

செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்

கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே

குறவர் மடமகள் கொடிபோல் நுசும்பின்

மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே" (திருமுருகு.91-102)

இவ்வாறு நக்கீரர் ஆறுமுகனின் அருள்பற்றி மொழிய அருணகிரியும் அவற்றிலிருந்து மாறுபட்டு ஆறுமுகமான அருளுக்கு வெவ்வேறு விளக்கங்கள் தருவதை,

"ஏறுமயிலேறி விளையாடும் முக மொன்றே

ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே

கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே

மாறுபடு சூரரை வதைத்த முக மொன்றே

குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே

வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே

ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்

ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மானே" (திருப்புகழ்.1328)

என்ற பாடலடிகள் ஆறுமுகமானவன் மயில் மீது ஏறி விளையாடி திருவிளையாடல்கள் செய்த முகமாகவும், சிவபெருமானுக்கு ஞான உபதேசம் செய்த முகம் இரண்டாகவும், அடியார்களின் இருள்வினைகளையும் தீர்த்து வைப்பது மூன்றாவது முகமாகவும், கிரவுஞ்ச

மலையை உருவும்படியாக வேலை ஏவிய முகம் நான்காகவும், மாறுபடும் அசுரரை வதைத்த முகம் ஐந்தாகவும், வள்ளியை மணம் புரிய வந்த முகம் ஒன்றாகவும் ஆதி அருணாச்சலம் அமர்ந்த பெருமான் என அருணகிரியார் ஆறுமுகனின் அருளாற்றலைப் போற்றிப் பாடுகிறார்.

குமரகுருபரர் அருணகிரியாரிலிருந்து சிறிது மாறுபட்டு பகைவர்களை அழிப்பதற்கு ஒரு முகமாகவும், ஊழ்வினையை அகற்றி முக்தி அளிக்கும் இரண்டாவது முகமாகவும், பல்வேறு ஆகமங்களைக் கற்று ஞானம் அருளும் மூன்றாவது முகமாகவும், அறியாமை எனும் இருளை அழிக்கும் நான்காவது முகமாகவும், ஆற்றல் தரும் ஐந்தாவது முகமாகவும், வள்ளியை மணம் முடிக்கும் முகமாகவும், பக்தர்களுக்கு வேண்டியதை அருளும் ஆறாவது முகமாகவும் குறிப்பிடுவதை,

“வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெவ்வருயிர் சிந்துத் திருமுகமும் - எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும் - சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும் - விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும் - நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியுடன் - தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்” (கந்தர் கலிவெண்பா.பா.21-24)

என்ற பாடலடிகள் மூலம் ஆறுமுகப் பெருமானின் பல்வேறு அருளாற்றலைப் பற்றி அறிய முடிகிறது.

## முடிவுரை

மொழிக்கென்று கடவுள் இருப்பது தமிழ்மொழியில் மட்டுமே ஆகும். தமிழ் மொழியின் சங்கத்தில் முருகனும் சிவனும் புலவர்களாகவும் அரசர்களாகவும் இருந்து தமிழ்ப்பணியாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முருகு என்றால் அழகு எனவும் மூன்று மெய்யெழுத்துக்களான ம்,ர்,க்-உடன் உயிரெழுத்தான உ இணைந்து மொத்தம் ஆறெழுத்துக்களாக நிறைந்த உயிர்ப்பொருள் ஆகிறது. சிவனே ஐந்து முகங்களுடன் அதோ முகம் எனும் ஆறுமுகனாக இவ்வுலகில் அவதரிப்பதை அறிய முடிகிறது. ஆறு எனும் சொல் பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் அமைவதன் மூலமும் அறுவகைச் சமயங்களில் கௌமாரம் என்பது முருகனுக்குரிய சமயமாக அமைவதன் மூலமும் முருகனுக்கென்று தனி சமயம் இருந்ததை அறிய முடிகிறது. உலகம் என்பது ஐம்பூதங்களால் உருவாக்கப்பட்டது. ஐம்பூதப்பொருட்களை பகுத்துக்கொண்டே போனால் பகுக்க முடியாத நிலை ஏற்படும். அதனையே அணு என்கிறோம். அணுவின்றி ஒரு பொருளும் அசையாது என்பது அணுக்களில் கார்பன் ஒன்று, புரோட்டான் ஒன்று, எலக்ட்ரான் ஆறும் இருக்கிறது. இந்த எலக்ட்ரான் எண்ணிக்கையானது புரோட்டானையும் கார்பனையும் சுற்றி வருகிறது. இதில் ஒன்று குறைந்தோ அல்லது அதிகமாகிவிட்டாலோ உயிர் தத்துவம் நீங்கிவிடும் எனவே ஆறு எலக்ட்ரான் உயிர்ப்பொருட்களை வைத்தே மனித உடலில் உயிர்ப்பு ஆற்றலாக விளங்கும் ஆறு ஆதாரங்களும் செயல்படுவதன்

மூலமும் ஆறின் சிறப்பை அறிய முடிகிறது. ஆறுமுகக்கடவுளின் தோற்றம் பல்வேறு பெயர்கள் ஆறுமுகன் பெயர் பற்றிய இலக்கியக் குறிப்புகள் பற்றி அறிய முடிகிறது. ஆறுமுகன் என்பவர் அசுரரை அழிக்கும் ஆற்றலாக மட்டுமல்லாமல் அடியோர்களுக்கு அருளும் ஆற்றலுடையவராக போற்றுவதன் மூலம் அருளும் ஆற்றலும், அழிக்கும் ஆற்றலும் ஒருங்கே அமைந்தவர் ஆறுமுகப் பெருமான் ஆவார். ஆறுமுகம் பற்றி அருணகிரியார், குமரகுருபரர், நக்கீரர் ஆகியோர் குறிப்பிடும் கருத்துக்கள் ஒரு சில முகங்களுக்கு மட்டுமே மாறுபடுகிறதே தவிர, மற்ற அனைத்தும் ஒரே நிலை குறித்தனவாக அமைவதாக உள்ளது. ஆறுமுகனின் வழிபாடு என்பது நெருப்பில் தோன்றி நீரில் பிறந்து வனத்தில் வளர்ந்ததன் மூலம் ஐம்பூத வழிபாட்டின் அடையாளமாக திகழ்வது ஆறுமுக வழிபாடு என்பதை அறிய முடிகிறது.

## References


Venkatasalam Pillai, Aranga, First edition 1949, Silapadhikaram Moolamum Uraiyum, Saivasithandha Noorpadhippukkazhagam, Tirunelveli.

Subramaniyan, P., Paripaadal, NCBH (p)ltd., Ambattur, Chennai, 600 098.

Rajendran, P., Thirumurugatruppadai, Gangai Puthaga Nilayam, 23, Deenadayalu Street, TNagar, Chennai -17.

Meenatchisundaram, T.S., First edition 1954, Thirumandhiram, Thiruvavaduthurai Aadheenam Publication, Thiruvavaduthurai.

Sengalvaraayapillai, V.S., Thiruppugazh, 2020, Sri Shenbaga Padhipagam, T.Nagar, Chennai – 17.

Kalyanasundaram, S., Kandhar Kalivenba, 1949, Bharathi Vijayam Achagam, Chennai.

Saravanan, S., Vallalar Aruliya Deivamanimaalai, Maranamilla Peruvaazhvu, Kavitha Padhipagam, TNagar, Chennai-17.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License